# ஜமால் முகமது (தன்னாட்சி) கல்லூரி

நெ.7, ரேஸ் கோர்ஸ் சாலை, காஜா நகர், திருச்சிராப்பள்ளி – 20.


பத்திரிகைச் செய்தி நாள் : 17.02.2021

## *"ஜமால் முகமது கல்லூரியில் பன்னாட்டுக் கருத்தரங்கு"*

திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியின் வணிகவியல் துறை (சுயநிதிப் பிரிவு) சார்பில், "டிஜிட்டல் வணிகத்தில் தற்போதய முன்னேற்றம் 2021" என்ற மையப்பொருளில் பன்னாட்டுக் கருத்தரங்கு, கல்லூரி வளாகத்தில் (17.02.2021 – புதன்கிழமை) இணையவழியில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள் தலைமை வகித்து உரையாற்றினார். இக்கருத்தரங்கிற்கு, சிறப்பு விருந்தினராக, கத்தார் தோஹாவைச் சேர்ந்த, ப்ரீ யுனிவர்சிட்டி டிவிஷன் நிதி மேலாளர் மற்றும் பட்டயக் கணக்காளர் எம். ஆஷிக் ரசூல் அவர்கள் கலந்துகொண்டு, டிஜிட்டல் வணிகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள், இந்திய டிஜிட்டல் வணிகத்திற்கும், பன்னாட்டு டிஜிட்டல் வணிகத்திற்கும் உள்ள வழிமுறைகள், ஆன்-லைன் வர்த்தகத்தில் உள்ள குளறுபடிகளை ஆராய்ந்து அறிவது எப்படி என்பன உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை விளக்கி, பன்னாட்டு கருத்தரங்கைத் தொடக்கிவைத்தார். மூன்று தனித்தனி அமர்வுகளாக நடைபெற்ற இந்த கருத்தரங்கில், கொல்கத்தா, மேற்கு வங்க பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் பிரணாம் தர் அவர்களும், பெங்களுரு கிறிஸ்து ஜெயந்தி கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் ஸ்டீபன் தீபக் அவர்களும், திருச்சிராப்பள்ளி ஜமால் முஹம்மது கல்லூரி வணிகவியல் துறைத்தலைவரான முனைவர் ஏ. கலீலுர் ரஹ்மான் அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். நிறைவுவிழாவில், ஓமன் நாட்டைச் சேர்ந்த பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் முனைவர் எட்வின் பிரேம்குமார் அவர்கள் கலந்து கொண்டு நிறைவுரையாற்றினார். கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர். ஏ.கே. காஜா நஜிமுத்தீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முகமது, துணைச்செயலாளர் முனைவர் கே. அப்துஸ்சமது, துணை முதல்வர் முனைவர் ஏ. முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் எம். முகமது சிஹாபுதீன், கல்லூரி நிர்வாக உறுப்பினர் மற்றும் இயக்குநருமான முனைவர் கே.என். அப்துல்காதர் நிஹால், முனைவர். கே.என். முகமது ஃபாசில், செல்வி. ஜே. ஹாஜிரா ஃபாத்திமா ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக துறைத்தலைவர் முனைவர் இ. முபாரக் அலி அனைவரையும் வரவேற்றார். கருத்தரங்க அமைப்பாளர் முனைவர் இராதாகிருஷ்ணன் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பேராசிரியர்கள் பசுபதி, முஹம்மது ஷரீப் உள்ளிட்ட குழுவினர் செய்திருந்தனர்.

JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS) TIRUCHIRAPPALLI-20

முதல்வர்
PRINCIPAL
JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)
TIRUCHIRAPPALLI-620 020.